சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை
தமிழ்நாடு அரசு


# தமிழ்நாடு மாநில
# குழந்தைகளுக்கான
# கொள்கை
# 2021



சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை
தமிழ்நாடு அரசு

## தமிழ்நாடு மாநில

# குழந்தைகளுக்கான கொள்கை – 2021



# உள்ளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| | அறிமுகம் | ... | 03 |
| 1. | தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை - ஒருபார்வை | ... | 05 |
| 2. | தமிழ்நாடு புள்ளி விவரங்கள் | ... | 07 |
| 3. | வழிகாட்டும் கோட்பாடுகள், இலக்கும் அதற்கான செயல் திட்டமும் | ... | 09 |
| 4. | இலக்கு நோக்கிய திட்டமிட்ட அணுகுமுறை | ... | 11 |
| | ➢ வாழ்வு (பிறத்தல்), உயிர் வாழ்தல், உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து | ... | 12 |
| | ➢ கல்வி | ... | 16 |
| | ➢ பாதுகாப்பு | ... | 20 |
| | ➢ பங்கேற்பு | ... | 24 |
| 5. | முடிவு | ... | 26 |



# அறிமுகம்

எல்லாக் குழந்தைகளும் மகிழ்ச்சியானதொரு குழந்தைப் பருவத்தை அனுபவிப்பதற்கு தகுதியுடையவர்கள். மேலும் வன்முறை, சுரண்டல், தவறாக நடத்தப்படுதல் (சொல், உடல், மனம், பாலியல் ரீதியாக உள்ளிட்ட அனைத்து விதத்திலும்), புறக்கணிப்பு, அடிப்படைத் தேவைகள் கிடைக்காமல் இருப்பது மற்றும் பாகுபாடு ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பாகவும். கண்ணியமான வாழ்க்கை நடத்துவதற்கான வாய்ப்பைப் பெறுவதற்கும் தகுதி உடையவர்கள்; எனினும், உலகம் முன் எப்போதையும் விட வேகமாக மாறி வருகிறது. அதைப்போலவே குழந்தைகள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள், சவால்களுடன் வாய்ப்புகளும் மாறி வருகின்றன. உலகெங்கிலும் உள்ள குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பெரும்பாலும் ஒன்றோடொன்று தொடர்புடையவை; உலகளாவியவை.

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடாகிய இந்தியாவில் 18 வயதுக்குக் கீழ் 472 மில்லியன் குழந்தைகள் உள்ளனர். இது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 39 சதவிகிதமாகும். இந்திய அரசியல் சாசனமானது நாட்டில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் அடிப்படை உரிமைகளை உறுதி செய்துள்ளது. மற்றும் குழந்தைகளுக்கான சிறப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள அரசுக்கு அதிகாரம் அளித்துள்ளது. “குழந்தைகள் சுதந்திரமாகவும்,

மாண்புடனும் கூடிய ஆரோக்கியமான சூழலில் வளர்ந்து முன்னேறுவதற்கும், அவர்கள் மேம்பாட்டிற்கான வாய்ப்புகளையும் வசதிகளையும் அரசு செய்து தரவேண்டும்" என அரசியல் சாசனத்தின் அரசு வழிகாட்டு நெறிமுறை கோட்பாடுகள் கூறுகிறது.

இந்திய அரசியலமைப்பு சாசனம் நிர்ணயித்த கோட்பாடுகளின் அடியொற்றி ஒட்டுமொத்த நாடு சீராக முன்னேறி சென்று கொண்டிருக்கும் போது, தமிழ்நாடு ஒட்டுமொத்த குறியீடுகளின் அடிப்படையில் மிகப்பெரிய எல்லைகளை வெகுவிரைவாகக் கடந்து வந்துள்ளது. குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நலன் சார்ந்த சேவைகளை செயலூக்கத்துடன் வழங்குவதில், தமிழகம் முன்மாதிரியாகவும், முன்னோடியாகவும் பார்க்கப்படுகிறது.

கடந்த காலத்தில் தமிழ்நாடு உருவாக்கிய புதுமையான கொள்கைகளும் திட்டங்களும் ஒட்டுமொத்த நாட்டிற்கே முன்னோடியாக உருவெடுத்துள்ளன. குழந்தைகளின் நிலையை எடுத்துரைக்கும் குறியீடுகளில் தமிழ்நாடு சிறப்பாக உள்ளது. குறிப்பாக நாட்டின் பிற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, குழந்தைகளின் சமூகம் – பொருளாதாரநிலை, சுகாதாரம் மற்றும் கல்வி நிலையில், தமிழகம் முன்னோடியாக உள்ளது. என்றாலும், கல்வியில் ஏற்கனவே இருக்கும் சமத்துவமின்மை, கணிணி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் உள்ள (டிஜிட்டல் வசதியில்) ஏற்றத்தாழ்வு, கற்றல் நெருக்கடி, குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள், வறுமை ஆகியவற்றை தீவிரப்படுத்தி, குழந்தைகளுக்கு நேரும் பாதிப்பை கோவிட்-19 மேலும் அதிகப்படுத்தியுள்ளது.

# தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை – ஒரு பார்வை

தேசிய அளவில் ஒப்பிடும்போது தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பில் நமது மாநிலம் முன்னேற்றத்தைக் கண்டுள்ளது என்பதை தமிழ்நாடு புள்ளி விவரங்கள் அட்டவணை தெளிவாக காட்டுகிறது. எனினும், குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் முறை, குழந்தைத் தொழிலாளர் முறையிலிருந்து மீட்கப்பட்டவுடன் அந்தக் குழந்தைகளின் நிலை, குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், சட்டத்துக்கு புறம்பாக செயல்படுகின்ற குழந்தைகளின் எண்ணிக்கை போன்ற பல விடயங்களில் குழந்தைகள் பாதுகாப்பை உறுதிசெய்ய தமிழ்நாடு அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளை இன்னும் தீவிரப்படுத்த வேண்டியிருக்கிறது. மேலே கூறப்பட்ட விடயங்கள், அரசு, குழந்தைகளின் நலனோடு தொடர்புடைய அனைத்து தரப்பினர் மற்றும் கொள்கை வகுப்பாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

தேசிய சராசரியுடன் ஒப்பிடும்போது குழந்தைகளின் நலனை மதிப்பிடுவதற்கான குறியீடுகளில் தமிழ்நாடு சிறப்பாகச் செயல்பட்டாலும், தடுக்கக்கூடிய மற்றும் தமிழக அரசின் கவனம் தேவைப்படும் சில பிரச்சனைகள் இங்கு உள்ளன. அவை:

- ஊட்டச்சத்துக் குறைபாடு
- குழந்தைகள் இறப்பு விகிதம்
- குழந்தைகள் பாலின விகிதம்
- உடல் எடை குறியீட்டெண்
- இரத்தசோகை
- ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் இறப்பு விகிதம்
- முழுநோய்த் தடுப்பு
- உயர் மற்றும் மேல்நிலைக் கல்வி நிலைகளில் மொத்த மாணவர் சேர்க்கை விகிதம்
- திறந்தவெளியில் மலம் கழித்தல்

போன்றவையாகும்.

தமிழ்நாட்டில் குழந்தைகள் எதிர்கொள்ளும் இத்தகைய பிரச்னைகளுக்கு தீர்வுகாணவும், அவர்களுக்குப் பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கான தனது கடமையை உறுதியாகக் கடைப்பிடிக்கவும், அதற்கான நீடித்த வளர்ச்சிக்கான இலக்கை அடையவும் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை – 2021ஐ உருவாக்கியுள்ளது.

1974 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் குழந்தைகளுக்கான தேசியக் கொள்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளபடி, “**தனது குழந்தைகளே மாநிலத்தின் மிகமுக்கியமான சொத்து**” என்பதை தமிழக அரசு மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

மாநில வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்டுள்ள பத்தாண்டு கால இலக்குகளை அடைய, இந்தப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது முதன்மையான முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உறுதிப்படுத்துவதுடன், இந்தப் பிரச்சனைகளைத் தீவிரமாக தமிழக அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

தமிழக அரசின் மாநில குழந்தைகளுக்கான கொள்கை, குழந்தைகளின் ஒட்டுமொத்த நலன்களை குறிப்பிடத்தகுந்த அளவில் மேம்படுத்தவும் குழந்தைகள் நிலை குறித்த குறியீடுகளில் சர்வதேசத் தரங்களுக்கு இணையான அளவுகோல்களை அமைக்கவும் உத்தேசித்துள்ளது.

தமிழக அரசின் மாநில குழந்தைகளுக்கான கொள்கை, வளரிளம் பருவத்தினரின் சுகாதாரம் மற்றும் அவர்களின் நிலை குறித்து சிறப்பு கவனம் செலுத்துவதோடு, மாநிலத்தின் குழந்தைகளின் பாதுகாப்பையும் நலனையும் உள்ளடக்கியுள்ள மேலே (முந்தைய பத்திகளில்) குறிப்பிடப்பட்டுள்ள பிரச்னைகளுக்குத் தீர்வுகாணவேண்டும் என்பதை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. குழந்தைகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ பாதிக்கும் அனைத்து அம்சங்களும் இந்தக் கொள்கையை வகுக்கும்போது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அதிகமான துன்பங்கள் நேரக்கூடிய மனிதாபிமானமற்ற சூழலில் இருக்கும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டிய அவசியத்தையும் இந்த ஆவணம் வலியுறுத்துகிறது.

# தமிழ்நாடு புள்ளி விவரங்கள்

## தமிழ்நாடு இந்தியா ஒப்பீடு - குழந்தைகள் தொடர்பான குறியீடுகள்

| குறியீடுகள் | தமிழ்நாடு | இந்தியா | ஆதாரம் |
|---|---|---|---|
| வறுமையின் நிகழ்வுகள் பன்முகப் பரிமாணம் (சதவீதத்தில் - %) | 30.5 | 52.7 | இந்திய பொது சுகாதார அலுவலகம் - OPHI, 2016 |
| வருமானம், சுகாதாரம், கல்வி ஆகியவற்றில் சமத்துவமின்மையால் மனிதர்கள் முன்னேற்றத்துக்கான குறியீடுகள் HDI இல் இழப்பு (சதவீதத்தில் - %) | 27 | 32 | IHDI, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் - UNDP, 2011 |
| குழந்தை மக்கள் தொகை (மில்லியன் மற்றும் % ல்) | 22, 29% | 440, 34% | மக்கள்தொகை கணக்கெடுப்பு 2011 |
| குழந்தை பாலின விகிதம் (CSR) | 954 | 919 | தேசிய குடும்ப சுகாதாரக் கணக்கெடுப்பு -NFHS-4, 2015-16 |
| 5 வயதுக்குட்பட்ட (ஊட்டச்சத்து குறைபாட்டினால் வயதுக்கு உரிய உயரம் இல்லாமல் குள்ளமாக இருக்கும்) வளர்ச்சி குன்றிய குழந்தைகள் (%) | 27.1 | 38.4 | NFHS-4, 2015-16 |
| இரத்த சோகை உள்ள குழந்தைகள் 659 மாதங்கள் (11.0 gm/dlக்கும் குறைவாக உள்ள) (%) | 50.7 | 58.6 | NFHS-4, 2015-16 |
| முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகள் (12-23 மாதங்கள்) (%) | 69.7 | 62 | NFHS-4, 2015-16 |
| உயரத்துக்கு ஏற்ற உடல் எடை (பிஎம்ஐ) 18 (1518 வயது) க்கும் குறைவாக உள்ள பெண்கள் (%) | 35.2 | 44.7 | குழந்தைகள் குறித்த அதிவிரைவுக் கணக்கெடுப்பு RSOC, 2013-14 |

| | | | |
|---|---|---|---|
| சிசு இறப்பு விகிதம் (உயிரோடு பிறக்கும் 1000 குழந்தைகளில்) | 12 | 23 | புள்ளிவிவரங்கள் தொடர்பான அறிக்கை - SRS 2018 |
| 5 வயதுக்குட்பட்ட குழந்தை இறப்பு விகிதம் (உயிரோடு பிறக்கும் 1000 குழந்தைகளில்) | 17 | 36 | SRS 2018 |
| தாய் இறப்பு விகிதம் - MMR (உயிரோடு பிறக்கும் 100,000 குழந்தைகளில்) | 60 | 113 | SRS 2018 |
| குழந்தைகள் பள்ளி சேர்க்கை விகிதம் - GER (1- 8ம் வகுப்புகளில்) | 98 | 97.8 | கல்வி குறித்த மாவட்ட அளவிலான ஒருங்கிணைந்த தகவல் அமைப்பு - UDISE+ 2019-20 |
| குழந்தைகள் பள்ளி சேர்க்கை விகிதம் -GER (வகுப்பு 9-10) | 90.5 | 77.9 | UDISE+ 2019-20 |
| குழந்தைகள் பள்ளி சேர்க்கை விகிதம் -GER (வகுப்பு 11-12) | 73.2 | 51.4 | UDISE+ 2019-20 |
| தற்போது 22-24 வயதில் இருக்கும் 18 வயதுக்கு முன் திருமணமான பெண்கள் (%) | 16.3 | 26.8 | NFHS-4, 2015-16 |
| உழைப்பில் ஈடுபட்டுள்ள 5 - 14 வயது குழந்தைகள் (%) | 2.49 | 4.5 | மக்கள்தொகை கணக்கெடுப்பு 2011 |
| திறந்த வெளியில் மலம் கழிக்கும் குடும்பங்கள் (%) | 43.4 | 45.5 | RSOC 2013-14 |
| குழந்தைகளுக்கு எதிரான மொத்த குற்றங்கள் (மக்கள் தொகையில் ஒவ்வொரு 100000 குழந்தைகளில் குற்ற விகிதம்) | 4338 (21) | 128531 (28.9) | தேசிய குற்ற ஆவணக் காப்பகம் - NCRB 2020 |
| சட்டத்தோடு முரண்படும் (குற்றச் செயல்களில் ஈடுபடும்) மொத்த சிறார்களின் எண்ணிக்கை (மக்கள் தொகையில் ஒவ்வொரு 100000 குழந்தைகளில் குற்ற விகிதம்) | 3394 (16.4) | 29758 (6.7) | NCRB 2020 |

# வழிகாட்டும் கோட்பாடுகள், இலக்கும் அதற்கான செயல் திட்டமும்

## வழிகாட்டும் கோட்பாடுகள்

தமிழ்நாடு அரசின், குழந்தைகள் கொள்கையின் வழிகாட்டும் கோட்பாடுகளானது கீழ்க்காண்பவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

- குழந்தைகள் உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கை 1989 (UNCRC)
- தேசியக் குழந்தைகள் கொள்கை 2013 (NPC 2013)
- தேசிய செயல் திட்டம் 2016 மற்றும் நமது உலகத்தை உருமாற்றுதல் (NPA 2016)
- ஐ.நா.வின் நீடித்த வளர்ச்சி குறித்த 2030க்கான திட்டம் (UN-SDG)

ஆகவே தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை பின்வருவனவற்றை அங்கீகரித்து உறுதிசெய்கிறது:

1. 18 வயது நிரம்பாத எவரொருவரும் குழந்தை எனக் கருதப்படுவர்.
2. ''குழந்தைகளுக்கே முதல் கவனிப்பு'' என்ற கொள்கையின்படி குழந்தைகள் நலம்தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் அவை பொதுத்துறை அல்லது தனியார்துறை அல்லது நிர்வாக அமைப்புகள் அல்லது சட்டமியற்றும் அமைப்புகள் என எவற்றால் மேற்கொள்ளப்பட்டாலும் அவை அனைத்திலுமே குழந்தைகளின் சிறந்த நலனே முதன்மையானதாகக் கொள்ளப்படும்.
3. அனைத்துக் குழந்தைகளுக்கும்:

- அவர்கள் பிறந்த இடம், பாலினம், மதம், சாதி, வர்க்கம், மொழி, மாற்றுத்திறனாளியாக இருக்கும் நிலை, சமூகம், பொருளாதாரம் அல்லது வேறு ஏதேனும் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு பார்க்கப்படாமல் இருக்க உரிமைகள் உள்ளன.

- அனைத்துவிதமான துன்புறுத்தல், தவறாக நடத்தப்படுவது, புறக்கணிப்பு, வன்முறை, கொடுமைப்படுத்துதல் மற்றும் சுரண்டலில் இருந்து பாதுகாக்கப்பட உரிமை உள்ளது.
- குழந்தைகள் சம்பந்தப்பட்ட அனைத்து விஷயங்களிலும் அவர்களது கருத்துக்கள் கேட்கப்படவும், மதிக்கப்படவும் மற்றும் அவர்களது கருத்துக்களை வெளிப்படுத்த அவர்களுக்கு உரிமை உள்ளது.

4. நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை நிறைவேற்றுவது, குழந்தைகளின் ஒட்டுமொத்த மேம்பாட்டுக்கு அவசியமானதாகும்.

தமிழ்நாடு மாநில அரசின் குழந்தைகள் கொள்கையின் இலக்கும் செயல்திட்டமும் பின்வருமாறு:

## இலக்கு

ஒரு பாதுகாப்பான சூழலில், ஆண் / பெண் குழந்தைகள் தங்களுடைய முழுத்திறனையும் அடையும் வகையில், ஒவ்வொரு குழந்தையின் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்தல் மற்றும் குழந்தைகளுக்கான நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைதல்.

## செயல்திட்டம்

ஒவ்வொரு குழந்தையும், அனைத்து விதமான வன்முறை, தவறாக நடத்தப்படுதல் மற்றும் சுரண்டலிலிருந்து பாதுகாக்கப்படவும், அவர்களுக்கு தரமான சுகாதார பராமரிப்பு மற்றும் கல்வி கிடைப்பதை உறுதி செய்யவும், அவர்கள் சம்பந்தப்பட்ட எந்த பிரச்சனைகளிலும் அவர்களுடைய கருத்தை சுதந்திரமாக வெளிப்படுத்தும் சூழலை உருவாக்கவும், மேலும் “எந்த ஒரு குழந்தையும் விடுபடாமல் பாதுகாக்கப்படவேண்டும்” என்ற கொள்கை கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்யவும், தமிழ்நாடு அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

# இலக்கு நோக்கிய திட்டமிட்ட அணுகுமுறை

ஐக்கிய நாடுகளின் குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கை 1989, குழந்தைகளின் உரிமைகளை சந்தேகத்துக்கிடமின்றி பட்டியலிட்டு, அவற்றை நிலைநாட்டுவதற்கான விரிவான செயல்திட்டத்தையும் அளித்துள்ளது. ஒரு குழந்தையின் வாழ்க்கைச் சுழற்சியில், உயிர்வாழ்தல், வளர்ச்சி, மேம்பாடு, பாதுகாப்பு மற்றும் பங்கேற்பு ஆகியவற்றின் அனைத்து அம்சங்களிலும், ஒட்டுமொத்த முன்னேற்றத்தை உறுதி செய்வதற்கான கருத்தியலை தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை ஆதரிக்கிறது.

கருப்பொருள் அடிப்படையில் கவனம் செலுத்தப்படவேண்டிய நான்கு அம்சங்கள் வருமாறு:




**1. வாழ்வு (பிறத்தல்), உயிர் வாழ்தல், உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து**



**2. கல்வி**



**3. பாதுகாப்பு**



**4. பங்கேற்பு**

# 1. வாழ்வு (பிறத்தல்), உயிர் வாழ்தல், உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து

தமிழ்நாடு அரசு அனைத்துக் குழந்தைகளுக்கும் சமமான வாழ்க்கைக்கான வழி, உயிர்வாழ்தல், உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்தை அளிக்க உறுதி பூண்டிருக்கிறது. இந்த இலக்குகளை அடைய, குழந்தையின் அனைத்து வாழ்க்கை நிலையிலும் உடல்நலம் சார்ந்த தேவைகளை பூர்த்திசெய்வது அவசியம் என்ற அணுகுமுறையை அரசு கவனத்தில் கொண்டுள்ளது. உடல்நலமும் ஊட்டச்சத்தும் கிடைப்பதில் நிலவிவரும் ஏற்றத்தாழ்வை நீக்குவதற்கு குழந்தைகளின் முழுமையான, ஒட்டுமொத்த மேம்பாட்டை மையப்படுத்தி தீவிரமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய அவசியத்தை அரசு முன்னிறுத்துகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்களது வாழ்வின் பல்வேறு நிலைகளிலும் வளர்ச்சிக்கான தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவும் பசி, ஊட்டச்சத்துக் குறைபாடு, பற்றாக்குறை போன்றவற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்க தேவையான ஊட்டச்சத்தை வழங்கவேண்டும் என்பதில் அரசு உறுதியாக இருக்கிறது.

சுகாதாரத் திட்டங்களுக்கிடையே கவனம் மற்றும் இணக்கத்தை அதிகரிக்க, தமிழ்நாடு மாநில, குழந்தைகளுக்கான கொள்கை பின்வரும் அணுகுமுறைகளை கண்டறிந்து கட்டாயப்படுத்துகிறது:–

1. ஒரு பெண் கருவுற்ற நாள் முதல், அந்த குழந்தையின் இரண்டாவது பிறந்தநாளுக்கிடையேயுள்ள காலம் வரை, ஆரோக்கியமான மற்றும் வளமான எதிர்காலத்தை கட்டமைக்க தனித்துவமான வாய்ப்பை வழங்குவதால், குழந்தையின் முதல் 1000 நாட்களில் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அதிக முன்னுரிமை வழங்குதல். முதல் 1000 நாட்களில் ஒரு குழந்தைக்குக் கிடைக்கும் ஊட்டச்சத்து, உறவுகள், புரிதல், சமூகமயமாக்கல், உடல் ரீதியான தகவல் தொடர்பு மற்றும் சுற்றுச் சூழல் ஆகியவை குழந்தையின் எதிர்காலத்தை குறிப்பாக குழந்தையின்

மூளைவளர்ச்சி மற்றும் வளர்வதற்கான, கற்றல் மற்றும் மேம்படுவதற்கான திறனை வடிவமைக்கின்றன.

2. குழந்தைகளுக்கு உடல்நலம், ஊட்டச்சத்து, பாதுகாப்பான குடிநீர் மற்றும் தரமான உயர் சுகாதாரச் சூழலை ஏற்படுத்திக் கொடுக்க முக்கியத்துவம் அளிப்பதோடு கருக்கொலை, குழந்தை இறப்பு மற்றும் நோயுற்றதன்மை போன்றவற்றை தீர்மானிக்கும் முக்கிய காரணிகளை கண்டறிந்து சரிசெய்தல்.

3. பிறப்பு, குழந்தை பிறப்பிற்கு இடையேயான இடைவெளி மற்றும் உடல்நலத்தில் அதன் தாக்கம் குறித்து தகவல்களை அறிந்து அதற்கேற்றவாறு செயல்பட சமூகத்திற்கு உதவும் வகையில் அனைத்து படிநிலைகளிலும் தகவல்கள் மற்றும் சேவைகள் கிடைப்பதை அதிகரிக்கச் செய்வது.

4. கர்ப்பகால பராமரிப்பு, பாதுகாப்பான மருத்துவமனைப் பிரசவம், மற்றும் பிரசவத்திற்கு பிந்தைய பராமரிப்பு உட்பட, இனப்பெருக்கம் மற்றும் தாய்சேய் (RMNCH) நலம் மற்றும் ஊட்டச்சத்து சார்ந்த சேவைகளை மேம்பட்ட வகையில் வழங்கும் வண்ணம் பொது சுகாதார கட்டமைப்பை வலுப்படுத்துதல்.

5. இன்றைய மேம்பட்ட தொழில்நுட்ப முன்னேற்றத்தைப் பயன்படுத்தி சுகாதார பராமரிப்பு மற்றும் ஊட்டச்சத்துக்கான சிறப்பு வழிமுறைகளைக் கையாளுதல், கர்பிணிப் பெண்களுக்கு ஆரோக்கியம் சார்ந்த ஊட்டச்சத்து குறித்த கல்வி, குழந்தைகளைப் பராமரிக்கும் தாய்மார்கள் மற்றும் பதின்பருவப் பெண்களைப் பேண சிறப்பு நடவடிக்கைகளை எடுத்தல்.

6. அங்கன்வாடிகளை பலப்படுத்துவதன் மூலம் ஆறு வயதுக்குக் கீழ் உள்ள அனைத்துக் குழந்தைகளும் தரமான குழந்தைப் பருவப் பராமரிப்பு மற்றும் வளர்ச்சியையும் உலகளாவிய அளவில் சமமான அளவில் பெறுவதை உறுதி செய்தல்.

7. பிறந்த குழந்தை பராமரிப்பு மற்றும் குழந்தைகள் ஆரோக்கியத்தில் (நோய்த்தடுப்பு, சிகிச்சை, பராமரிப்பு மற்றும் மேலாண்மை) தொடர்ச்சியான முன்னேற்றம்; அனைத்து தொற்று, தொற்றா நோய்கள் மற்றும் தடுக்கக் கூடிய நோய்களிடமிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல், அத்தகைய சேவைகளை அனைத்து குழந்தைகளுக்கும் எளிதில் கிடைக்கச் செய்தல்.

8. பிறப்பில் எச்ஐவி பாதிப்பை தவிர்த்தல் மற்றும் அவ்வாறு தொற்றுள்ள குழந்தைகளுக்கு சரியான பராமரிப்பு வழிமுறைகள், ஊட்டச்சத்து மற்றும் தொடர் பராமரிப்பு ஆகியவற்றை உறுதி செய்தல்.
9. குடும்பம் மற்றும் சமூக அளவிலுள்ள, சிசு மற்றும் குழந்தைப் பராமரிப்பு நடைமுறைகளை மேம்படுத்த தேவைப்படும் நடத்தை மாற்றத்தில் கவனம் செலுத்துதல், ஆதரவளித்தல் மற்றும் ஊக்குவித்தல்.
10. பிரசவத்திற்கு முன்னும், பிரசவத்தின் போதும், அதற்குப் பின்னரும் தாய் மற்றும் சேய்க்கு ஏற்பட்டுள்ள குறைபாட்டை (உடல் மற்றும் மனம் தொடர்பான) தடுக்க உரிய நேரத்தில் தலையீடு செய்தல்.
11. பிரசவத்திற்கு முன்னும் பின்னும் ஏற்படும் குறைபாடுகளை ஆரம்ப நிலையில் கண்டறிதல், சிகிச்சை மற்றும் மேலாண்மை செய்வது போன்ற சேவைகளை வழங்குதல்.
12. சிறப்புத் தேவையுள்ள குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறனாளிக் குழந்தைகளின் கல்வி ஆகியவற்றிற்கான மேலாண்மை, ஆதரவு மற்றும் மறுவாழ்வு சேவைகளைப் பலப்படுத்துதல்.
13. வளர்ந்துவரும் தேவைக்கேற்ப குழந்தைகளின் நோய்த்தடுப்பு அட்டவணையை மறுகட்டமைத்தல் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துகளை எடுத்துக் கொள்வதை அதிகரிப்பதற்கான விழிப்புணர்வு செயல்பாடுகளைத் தீவிரப்படுத்தல்.
14. குழந்தைகள் மத்தியிலுள்ள உடல்நலப் பிரச்சனைகளை ஆரம்ப நிலையில் கண்டறிந்து, மேலாண்மை மற்றும் சிகிச்சை செய்ய அமைப்பு முறைகளை மேம்படுத்துதல்.
15. தற்போது கிடைக்கும் அத்தியாவசிய தாய்சேய் நல சேவைகளை மேம்படுத்துதல்.
16. குழந்தைகளின் உடல், மனம் மற்றும் இனப்பெருக்க நலன் மற்றும் வளர்ச்சி (ஆரோக்கியமான வாழ்க்கை முறைகள் உட்பட) சார்ந்த அத்தியாவசிய சேவைகள் மற்றும் தகவல் பெறுவதற்கான வழிமுறைகளை வலுப்படுத்துதல் மற்றும் சமூகத்தின் ஈடுபாட்டை அதிகரித்தல்.

17. உடல் மற்றும் மன நலம் தொடர்பான விழிப்புணர்வை அதிகரிக்கவும் மற்றும் அனைத்து குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினரின் உடல்நலம் மற்றும் சமூகத்தின் பங்கை கண்காணிக்கவும் தேவையான அமைப்பு முறைகளை உருவாக்குவது.

18. பாதுகாப்புத் தரத்தை உறுதி செய்வதன் மூலம் குழந்தைகளுக்கு பாதுகாப்பான பொருட்கள் மற்றும் சேவைகளை மட்டுமே அங்கீகரித்தல்.

19. வேலை செய்யும், பின்தங்கிய அல்லது நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான குழந்தைகள் காப்பகங்கள், பகல்நேரப் பராமரிப்பு வசதிகளை மேம்படுத்துதல்; பொது இடங்களிலும் பணியிடங்களிலும் குழந்தைகளுக்கு பாலூட்டும் வசதிகளை செய்து கொடுத்தல்.

20. சுகாதாரம் சார்ந்த புதுமையான செயல்பாடுகளுக்கு ஆதார அடிப்படையிலான ஆராய்ச்சியை கட்டமைத்தல்.

21. குழந்தைகளின் உடல்நிலையில் குறைந்த அளவுருக்கள் / தரநிலைகள் உள்ள பகுதிகளில் உரிய கவனத்துடன் தலையீடு செய்தல்.

22. அனைத்துக் குழந்தைகளுக்கும் போதுமான உணவுப் பாதுகாப்பு கிடைப்பதை உறுதிசெய்தல்.

23. வளரிளம் பருவத்தினர் பாலின ஆரோக்கிய உரிமை மற்றும் சேவையைப் பெற உறுதி செய்தல்.

24. நுண்ணூட்டச் சத்துகள் செறிந்த உணவுகள் குறித்த விழிப்புணர்வு மற்றும் அவைகள் கிடைக்கப் பெறுதலை மேம்படுத்துவதன் மூலம் நுண்ணூட்டச் சத்துக் குறைபாடுகளைத் தவிர்த்தல்.

25. 0 முதல் 18 வயது வரையிலான குழந்தைகள் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள், தெருவோரக் குழந்தைகள், குடிசைப் பகுதிகளில் உள்ள குழந்தைகள், மூன்றாம் பாலினம் மற்றும் மாற்றுத் திறனாளி குழந்தைகள் உட்பட அனைத்துக் குழந்தைகளையும் கண்காணித்தல்.

# 2. கல்வி

ஒவ்வொரு குழந்தைக்கும் கற்றல், அறிவு மற்றும் கல்விக்கான சம உரிமை உள்ளது என்பதை தமிழக அரசு அங்கீகரிக்கிறது. சர்வதேசத் தரத்திற்கு இணையாக குழந்தையின் கல்வித் தேவைக்கும் நல்வாழ்வுக்கும் உகந்த அமைப்பைக் குழந்தைக்கு கிடைக்கச் செய்வதில், தனது பொறுப்பை அரசு மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

தேசியப் பாடத்திட்டக் கட்டமைப்பு (NCF), இலக்காகக் கொண்டுள்ள ஆற்றல்/திறன் கட்டமைப்பைப் பயன்படுத்தி, அடிப்படை எழுத்தறிவையும் எண்ணறிவையும் (FLN), வயதுக்கும், படிக்கும் வகுப்புக்கும் பொருத்தமான கற்றல் விளைவுகளைத் தரம் உயர்த்துவது குறித்து தனது உறுதியான அர்ப்பணிப்பை தமிழ்நாடு அரசு, இந்தக் கொள்கையின் மூலம் வெளிப்படுத்தியுள்ளது. தமிழகத்தில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் தரமான கல்வி சென்றடைவதை உறுதிசெய்ய உதவும் சமீபத்திய தொழில்நுட்ப முன்னேற்றங்கள்/தளங்களைப் பயன்படுத்துவதற்கு தெளிவாக உறுதி பூண்டுள்ளது.

கீழே குறிப்பிட்டுள்ளவற்றை உறுதி செய்ய, மாநில அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

1. குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு அவர்களை பலமாக வைத்திருப்பதற்கு முக்கியத்துவம் தருவது; அவர்களின் வாழ்க்கை, உடல் மற்றும் நடத்தையை தாங்களே நிர்வகிக்கும் அளவுக்கு அவர்களை முழுமையாக ஆற்றல்படுத்துவதற்கான வசதி செய்தல்.
2. குழந்தையின் உடல், மனம் மற்றும் உணர்வைப் பாதுகாக்கும் மற்றும் அவர்களின் நல்வாழ்வை உறுதி செய்யும் பாதுகாப்பான, பத்திரமான கற்றல் அமைப்பைத் தருதல்.
3. 5 வயது முடிந்த அனைத்துக் குழந்தைகளுக்கும் அவர்களுக்கு அருகாமையில் பள்ளியை அமைத்து, குழந்தைகளின் ஆரம்பக் கல்வியை உறுதிசெய்தல்.

4. குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் முறை, பாலினம் மற்றும் சமூகப் புறக்கணிப்பு போன்ற கல்வி கற்பதற்கான பல்வேறு தடைகளை சரி செய்து அனைத்து நிலைகளிலும் பள்ளி இடைநிற்றலைக் குறைத்தலின் மூலம் பாதுகாப்பான முறையில் பள்ளிகளில் இலவச, சமமான, அனைத்து வகையான குழந்தைகளையும் உள்ளடக்கிய மற்றும் தரமான கல்வி கிடைப்பதை அதிகரித்தல்.

5. மிகச் சிறப்பான இடைநிலைக் கல்வியை குறைந்த செலவில் அனைத்துக் குழந்தைகளுக்கும் கிடைக்கச் செய்தல், அதன் மூலம் அவர்கள் உயர்கல்வியை அடைவதற்கான உரிமை உடையவர்களாக்குதல்.

6. பாலின சமத்துவம், அறம் சார்ந்த மதிப்பீடுகள் குறித்த கல்வி, வாழ்க்கைத் திறன் மற்றும் தற்காப்பு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பது, இதற்காக வயதுக்கு ஏற்ற, அனைவரும் பங்கேற்கும் விதத்திலான குழந்தைகளுக்குப் பிடித்த கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்முறைகளை உருவாக்குதல்.

7. அனைவருக்கும் தரமான கல்வியை வழங்கும் அமைப்புகளை வளர்த்தெடுத்து அவற்றின் வளர்ச்சி மற்றும் அடிப்படையை நிலைநாட்டுதல்.

8. அனைவருக்குமான பள்ளிகள், அதில் போதிய அளவு பொருத்தமான உள் கட்டமைப்பு வசதிகள், சிறப்புக் கவனிப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கான தகுதியான பயிற்சி பெற்றவர்கள் மற்றும் சிறப்புக் கல்வியாளர்கள், மாற்றுத் திறனாளி மற்றும் சிறப்புத் தேவைகள் உடைய குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தை உறுதி செய்தல்.

9. குறிப்பாக வசதியற்ற சமூகப் பின்னணியில் இருந்து வரும் குழந்தைகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு ஆதரவளித்தல், ஊக்கமளித்தல் மற்றும் உதவுதல்.

10. குழந்தைகளின் பிறப்பிடம், பாலினம், மதம், சாதி, உடல்நலம், உடல் அல்லது மன ரீதியான குறைபாடு அல்லது சமூக, பொருளாதார அல்லது வேறு எந்த நிலையையும் பொருட்படுத்தாமல் அவர்கள் அனைவருக்கும் சம வாய்ப்பு, நடத்தும் முறை மற்றும் பங்கேற்பை வளர்த்து, பள்ளிகளில் அனைத்து வகையான பாகுபாடுகளையும் அகற்றுதல்.

11. பள்ளிகள் மற்றும் ஆசிரியர்களுக்குள் மாண்புடன் கூடிய கண்ணியம் மற்றும் நேர்மறை ஒழுக்கமுடைய கலாச்சாரத்தைக் கட்டமைத்தல்; வகுப்பிற்குள் அல்லது வெளியில் எந்தவொரு வடிவத்திலும் உடல் ரீதியான தண்டனை அல்லது மனரீதியான துன்புறுத்தலை கண்டிப்புடன் தடைசெய்தல்.

12. அனைத்துக் குழந்தைகளுக்குமான குறிப்பாக தொற்றுநோய் மற்றும் இயற்கை அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவு போன்ற சூழ்நிலைகளில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஒருங்கிணைந்த, எளிதில் கிடைக்கத்தக்க கல்வியை வழங்குவதற்கு தகவல் தொடர்புத் தொழில்நுட்ப (ICT) கருவிகளைப் பயன்படுத்துவற்கு முன்னுரிமை அளித்தல்.

13. அனைத்துக் குழந்தைகளுக்கும் பாதுகாப்பான, மகிழ்ச்சியான மற்றும் வயதுக்கு ஏற்ற கணிணி வழிக் (டிஜிட்டல்) கல்வி வழங்குதல்.

14. அறிவியல் ஆய்வகங்கள், கணினி ஆய்வகங்கள், நூலகங்கள், சுத்தமான பயன்படுத்தத்தக்க கழிவறைகள், பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதாரமான சூழல் உள்ளிட்ட போதுமான உட்கட்டமைப்புத் தேவைகளை உருவாக்குவதன் மூலம் பள்ளிகள் மற்றும் குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களின் தரத்தை உறுதி செய்தல்.

15. பள்ளிகளில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆலோசனை, தொழிற்பயிற்சி வழிகாட்டுதல் மற்றும் பயிற்சிக்கான வாய்ப்புகள் மூலம் தொழிலை தேர்வு செய்ய வாய்ப்பு வழங்குதல்; மற்றும் பள்ளி இடைநின்றவர்கள் மீது சிறப்புக் கவனம் செலுத்துதல்.

16. குழந்தைகளின் வயதுக்கேற்றபடி உள்ளார்ந்த திறனை வளர்ப்பதற்காக சுற்றுவட்டாரம், பள்ளிகள் மற்றும் பிற நிறுவனங்களில் கலாச்சார மற்றும் அறிவியல் பூர்வ செயல்பாடுகள், பாதுகாப்பான விளையாட்டு மைதானங்கள், விளையாட்டு, பொழுது போக்கு, ஓய்வு, பாரம்பரிய மற்றும் நவீன விளையாட்டுக்கள் ஆகியவற்றிற்கான முன்முயற்சிகளை மேம்படுத்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல்.

17. உள்ளூரில் எளிதில் அணுகும் விதத்தில் பொது நூலகங்களை மேம்படுத்தி குழந்தைகளிடையே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துதல்.

18. மது, புகையிலை மற்றும் அனைத்து போதைப் பொருள் போன்ற தீங்குகள் நெருங்காத வண்ணம் பள்ளி குழந்தைகளைப் பாதுகாத்தல்.
19. கல்விச் சேவைகள் கிடைப்பதில் உள்ள இடைவெளியை நிரப்புதல் மற்றும் அது தொடர்பான வரைவுத் திட்டத்தை உருவாக்க உள்ளாட்சிகளுடனும் சமூக அமைப்புகளுடனும் இணைந்து செயல்படுத்துதல்.
20. இடைநிற்றல் மற்றும் அதற்கான காரணங்களை ஆய்வு செய்ய பள்ளிகளில் குழந்தைகளைத் தொடர்ந்து கண்காணித்தல்.
21. அனைத்து குழந்தைகளுக்கும் பாதுகாப்பான, இலவச, ஒருங்கிணைந்த, சமத்துவமான மற்றும் தரமான கல்வியை உறுதி செய்ய பள்ளி மேலாண்மைக் குழுக்களை வலுப்படுத்துதல்.
22. அனைத்து குழந்தைகளையும் பொறுப்புள்ள குடிமக்களாக மேம்படுத்த வழக்கமான பள்ளிப் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக அரசியலமைப்பு உரிமைகளை அறிமுகப்படுத்துதல்.
23. உள்ளாட்சி அமைப்புகளுடன் பல்துறையினரின் ஆதரவு மற்றும் ஒருங்கிணைந்து பணிகளைச் செய்து சமூகம் சார்ந்த அமைப்புகளை வலுப்படுத்துதல்.
24. புலம்பெயர் தொழிலாளர்களின் குழந்தைகளை பகுதிவாரியாக இனம் கண்டு அவர்கள் கல்வியைத் தொடர ஏற்பாடுகள் செய்தல் மற்றும் அவர்கள் தங்கள் தாய்மொழியில் கல்வி கற்க வாய்ப்பு வழங்குதல். அவர்கள் தடையின்றி தங்கள் கல்வியைத் தொடர வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்தல்.

# 3. பாதுகாப்பு

அனைத்து குழந்தைகளும் மகிழ்ச்சியான குழந்தைப் பருவத்தை அனுபவிக்கவும் மற்றும் வன்முறை, சுரண்டல், புறக்கணிப்பு, பற்றாக்குறை மற்றும் பாகுபாட்டிலிருந்து பாதுகாக்கப்பட்ட ஒரு கண்ணியமான வாழ்க்கையை நடத்துவதற்கான வாய்ப்பைப் பெற தகுதியுடையவர்கள் என்பதை அங்கீகரிக்கும் அதே நேரத்தில், மாநிலத்திலுள்ள அனைத்துக் குழந்தைகளும் தங்கள் உரிமைகளைப் பெறவும் அவர்களுக்குப் பாதுகாப்பான குழந்தைநேய சுற்றுச்சூழலை உருவாக்க தேவையான அடித்தளத்தை அமைக்கவும் தமிழ்நாடு அரசு உறுதி பூண்டுள்ளது.

எனவே மாநில அரசு பின்வரும் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

1. பல்வேறு வகையில் தவறாக நடத்தப்படுதல் (உடல், உணர்வு, பாலியல், புறக்கணிப்பு, மறுப்பு மற்றும் இணையவழி சார்ந்த), பாகுபாடு, சுரண்டல், வன்முறை அல்லது அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் அல்லது அவர்களின் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்கும் எல்லா செயல்பாடுகளிலிருந்தும் குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக சமூகம் சார்ந்த கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் நிலைநிறுத்துதல்.
2. தமிழ்நாடு அரசு, குழந்தைகளுக்கு எதிரான எந்த விதமான வன்முறைக்கும் "முற்றிலும் சகிப்புத்தன்மையற்ற" (Zero Tolerance) எனும் கொள்கையை கடைப்பிடிக்கிறது. மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்கும் குழந்தைகளுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகளைத் தடுப்பதற்கும் சமமான முக்கியத்துவம் அளிக்கிறது.

3. தமிழ்நாடு முழுவதும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பான இடங்களை உருவாக்குவதற்காக அனைத்து ஊராட்சிகள் மற்றும் நகர்ப்புற அமைப்புகளில் குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கையை அறிமுகப்படுத்துதல் மற்றும் கடைபிடித்தல்.

4. அனைத்துப் பள்ளிகளையும் குழந்தைகள் பாதுகாப்புக்கு உகந்ததாக மாற்ற குழந்தைப் பாதுகாப்புக் கொள்கையை அனைத்துப் பள்ளிகளிலும் அறிமுகப்படுத்துதல்.

5. பள்ளி அளவில் எழும் புகார்களை விசாரிக்க, பாலியல் ரீதியாக தவறாக நடத்தப்படுவதிலிருந்து பாதுகாப்பு சட்டத்திலிருந்த (POSH) சட்டத்தின் கீழ் அனைத்துப் பள்ளிகளிலும் புகார் குழுவை அமைத்தல்.

6. தற்போதுள்ள குழந்தைப் பாதுகாப்பு அமைப்புகளை, குறிப்பாக கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழு (VLCPC) மற்றும் அருகாமை குழந்தைகள் பாதுகாப்புக் குழு (NCPC)-க்களை வலுப்படுத்துதல்.

7. குழந்தைகளுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகள், அந்த வன்முறைகளால் குழந்தைகளுக்கு ஏற்படும் எதிர்மறைத் தாக்கம், பிரச்சனைகளுக்குத் தீர்வு காண அவர்கள் அணுக வேண்டிய சட்டங்கள் / நிறுவனங்கள், போன்றவற்றிற்கு அணுக வேண்டிய அமைப்புகள் குறித்து அச்சு, மின்னணு மற்றும் சமூக ஊடகங்கள் போன்ற அனைத்து வகையான ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் செய்தல்.

8. அனைத்து குழந்தைகளின் (பாலினம், மதம், மொழி, சாதி, மாற்றுத்திறன் மற்றும் மன ரீதியான குறைபாடு, சமூக மற்றும் பொருளாதாரப் பின்னணி ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு அனைவருக்கும்) உரிமைகள் மற்றும் கண்ணியம் (மாண்பு) எப்போதும் நிலைநிறுத்தப்படுவதை உறுதிசெய்தல்.

9. பாதுகாப்பான, மரியாதையான பராமரிப்பு, குழந்தைநேய, பொதுக் கற்றல், ஊடக மற்றும் இணைய வெளிகளை உருவாக்குதல்.

10. சிறப்பு கவனம் மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளின் உரிமைகள் மற்றும் அவர்களுக்கு உரித்தானவற்றை அவர்கள் பெறுவதை உறுதிப்படுத்த சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

11. குடும்பப் பராமரிப்பு/மாற்றுப் பராமரிப்பை வலுப்படுத்துதல் மற்றும் நிறுவன பராமரிப்பை கடைசி முயற்சியாகக் கருதுதல்.

12. அனைத்துக் குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களிலும் பாதுகாப்பு மற்றும் பொறுப்புறுதியை (Security) மிக உயர்ந்த தரத்தில் அமல்படுத்துதல்.

13. குற்றத்தடுப்பு மற்றும் பொறுப்பான எதிர்வினையாற்றும் ஒரு குழந்தை பாதுகாப்பு அமைப்பைக் கட்டமைத்தல், பல்வேறு வகையில் தவறாக நடத்தப்படுதல், புறக்கணித்தல், பாகுபாடு, சுரண்டலுக்கு எதிராக நிர்வாக செயல்பாடுகள். மற்றும் சட்டங்களை திறம்பட அமலாக்கம் செய்வதையும் ஊக்குவித்தல்.

14. குழந்தைகளின், குறிப்பாக சிறப்பு கவனிப்பு தேவைப்படும் குழந்தைகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்குரிய பொருத்தமான மற்றும் திறன்மிக்கவர்களாக்க குழந்தைகள் பாதுகாப்புக் கட்டமைப்புகள் மற்றும் திட்டங்களை வலுப்படுத்துதல்.

15. தங்களின் பாதுகாப்புக்கென இருக்கும் சேவைகள் மற்றும் அமைப்புகள் பற்றிய விழிப்புணர்வை குழந்தைகளிடம் மேம்படுத்துதல்.

16. ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் திறன் வாய்ந்த குழந்தைப் பாதுகாப்பு அமைப்பு பல்வேறு துறைகளுடன் இணைந்து திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவற்றை மேம்படுத்துதல்.

17. குழந்தைகள் தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளையும் கண்டறிந்து, தலையிட்டு தீர்வு காண கிராமம், வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவிலான அமைப்புகளை உருவாக்குதல்.

18. மனநலம் மற்றும் உளவியல் சார்ந்த-சமூக ஆதரவில் சிறப்புக் கவனம் செலுத்தி குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பின் கீழ் மறுவாழ்வு சேவைகளை தரம் உயர்த்துதல்.

19. பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு புறம்பாகச் செயல்படும் குழந்தைகளின் தனியுரிமையை உறுதி செய்தல்; அவர்கள் தொடர்பான தரவுகளை ரகசியமாக வைத்திருத்தல்.

20. கண்காணிப்பு, மதிப்பீடு செய்தல் மற்றும் முடிவெடுப்பதை மேம்படுத்துவதற்கு, நிகழ்காலத் தரவை வழங்க, தரவுக் களஞ்சியம் மற்றும் தரவு மேலாண்மை அமைப்புகளின் தயார்நிலையை வலுப்படுத்துதல்.

21. நிறுவனங்களுக்குள் குழந்தைகள் வருகையைத் தடுக்கவும் குடும்பங்களுக்கு அனுப்பப்பட்டு நிறுவனங்களுக்குள் மீண்டும் வருவதைத் தடுக்கவும் குடும்ப அமைப்புகளை வலுப்படுத்தும் சேவைகளை உருவாக்குதல்.
22. குறிப்பாக, குழந்தைப் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி சார்ந்த விழிப்புணர்வு சாதனங்களை (தகவல், கல்வி) உருவாக்கி அதன் மூலம் சமூக விழிப்புணர்வை அதிகரித்தல்.
23. பாதுகாப்பு வளையத்திற்குள் வரும் குழந்தைகள் மீண்டும் பாதிக்கப்படாமல் தடுத்தல் மற்றும் தொடர் கண்காணிப்பு செய்தல்.
24. நிறுவனப் பராமரிப்பை விட்டு வெளியேறும் குழந்தைகள் சுயசார்பு பெறும் வரை அவர்களுக்குப் தொடர் பராமரிப்புச் சேவைகளை பலப்படுத்தல்.
25. குழந்தைப் பாதுகாப்புக் கொள்கை உருவாக்கும் போது சரியான முடிவுகள் எடுப்பதை மேம்படுத்துவதற்காக அவ்வப்போது மதிப்பீடுகள், ஆய்வு மற்றும் சமூகத் தணிக்கைகளை நடத்துதல்.
26. குழந்தைகளைப் பாதுகாப்பதற்கென்றே பிரத்யேகமாக பேரிடர் மற்றும் அவசரநிலை மேலாண்மை அமைப்பை உருவாக்கி செயல்படுத்துதல்.
27. பல்வேறுபட்ட நிலைகளில் குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குறைதீர் அமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல்.

# 4. பங்கேற்பு

தமிழ்நாடு அரசின் கொள்கையின் பொருத்தப்பாடு, தாக்கம், கூடுதல் மதிப்பு மற்றும் நடைமுறையில் பொருந்தும் தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்துகையில், குழந்தைகள் தங்கள் கருத்துக்களை உருவாக்கும் திறன் கொண்டவர்கள் என்பதை தமிழ்நாடு அரசு அங்கீகரிக்கிறது. குழந்தைகளை மதிப்பதும் அவர்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் பங்கேற்க அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதும் அரசு மேற்கொள்ளும் விரிவான சில நடவடிக்கைகள் ஆகும்.

தேவையான பிற நடவடிக்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியது:

1. குழந்தைகளின் வயது, முதிர்ச்சி மற்றும் திறன்களுக்கு ஏற்ப அவர்களின் திறன்களை வளர்த்துக் கொள்ளவும், அவர்களின் இலட்சியத்தை வளர்த்துக்கொள்ளவும், அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்தவும் வாய்ப்புகள் வழங்கப்படுவதுடன், அவர்களின் உரிமைகள் பற்றி அவர்கள் அறிந்து கொண்டனர் என்பதை உறுதிப்படுத்தல்.
2. குழந்தைகள் தங்களின் கருத்துக்களையும் தேவைகளையும் வெளிப்படுத்துவதற்கான தளங்களை பலப்படுத்துதல் மற்றும் அவற்றிற்கிடையே இணைப்பை ஊக்குவித்தல்.
3. குழந்தைகள் தங்கள் தொடர்பான விடயங்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல்.
4. குழந்தையின், குறிப்பாக பெண் குழந்தையின் கருத்துக்களுக்கு மிகுந்த மதிப்பளிப்பதை ஊக்குவித்தல்.
5. குடும்பம், பள்ளிகள் மற்றும் சமூகத்தில் குழந்தைகள் எந்த அளவுக்கு பங்கேற்கிறார்கள் என்பதை அளவிடுவதற்கான அளவுகோல்களை நிறுவ வேண்டிய அவசியத்தை அரசு உணர்கிறது. மேலும் ஆதார அடிப்படையிலான ஆராய்ச்சி மற்றும் சுயேச்சையான மதிப்பீடுகளுடன் இவை அமைய வேண்டும் என்பதை ஆதரிக்கிறது.

6. ‘குழந்தைகள் கலந்துரையாடவும் ஆலோசனைகள் பெறவும் சமூக ஆதரவுக் குழுவை’ உருவாக்குவதன் மூலம் சமூக அமைப்புகள், சர்வதேச அரசு சாரா நிறுவனங்கள் (INGO) / அரசு சாரா நிறுவனங்கள் (NGO), அமைப்புகளின் கூட்டமைப்புகள், பெருநிறுவனங்கள் (கார்ப்பரேட்கள்) மற்றும் கல்வி நிறுவனங்களுடன் வலிமையான கூட்டணியை உருவாக்குதல்.

7. பல துறை நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க, உள்ளாட்சி அமைப்புகள், சமூகம் சார்ந்த அமைப்புகள், துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்புக்கள் ஆகியவற்றைப் பலப்படுத்துதல்

8. மிகவும் பின்தங்கிய குழந்தைகளைக் கண்டறிதல், புதிய, நிரூபிக்கப்பட்ட செலவு குறைந்த செயல்பாடுகளில் ஈடுபடுதல், தடைகளைச் சமாளித்தல், சர்வதேச, தேசிய அமைப்புகளுடனும் மற்றும் சமூகங்களுடனும் இணைந்து செயல்படுவதன் மூலம் வலிமையான சமபங்கு அணுகுமுறைக்கான தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கையின் அடிப்படையில் குழந்தைகளுக்கான வலிமையான நிலையான மாதிரி வடிவமைப்பை உருவாக்குதல்.

9. 12 முதல் 18 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளும் உறுப்பினர்களாக இருக்கும் அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளிலும் பாலர் சபைகளை உருவாக்குதல்.

10. பாலர் சபைகள் வருடத்திற்கு நான்கு முறையாவது பாலர் கிராம சபையாகக் கூடி, குழந்தைகள் தொடர்பான விடயங்களில் தீர்மானங்களை நிறைவேற்றி, கிராம சபையில் சமர்ப்பித்து, அவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுத்தல்.

# முடிவு

2021ஆம் ஆண்டுக்கான தற்போதைய கொள்கையின்படி, தமிழ்நாடு அரசு தன் மாநிலத்தின் குழந்தைகளுக்கான தனது கடமையைத் தெளிவுபடுத்துகிறது, இதன் மூலம் மாநிலத்தில் உள்ள அனைத்துக் குழந்தைகளும் அவர்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான சூழலைப் பெற்றிருப்பதை உறுதி செய்கிறது, அவர்களின் உரிமைகள் அவர்களின் குழந்தைப் பருவம் முழுவதும் தொடர உத்தரவாதம் அளிக்கிறது.

இந்த அடிப்படையில், தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை (TNSCP-2021) குழந்தைகள் தொடர்பான அனைத்து சட்டங்கள், கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பாக அதில் பங்கேற்போருக்கு வழிகாட்டத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும். மாநிலத் திட்டத்தில் குழந்தைப் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கும் நடவடிக்கை தேவை என்பதை இந்த ஆவணம் வெளிப்படுத்துகிறது. ஒவ்வொரு துறையிலும் மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் முன்முயற்சிகளும் இந்தக் கொள்கைகள், விதிமுறைகள் மற்றும் இந்தக் கொள்கையின் நோக்கம் ஆகியவற்றை மதிப்பதாகவும் உயர்த்திப் பிடிப்பதாகவும் உள்ளது.

தமிழ்நாடு மாநில குழந்தைகள் கொள்கை – 2021 ஒரு விரிவான செயல் திட்டத்தை (PoA) உருவாக்குவதன் மூலம் செயல்படுத்தப்படும். இந்தக் கொள்கையின் முக்கிய நோக்கம், அனைத்து விதமான வன்முறைகளில் இருந்தும் / எந்த வகைப்பட்ட வன்முறையானாலும் குழந்தைகளை, குறிப்பாக எளிதில் பாதிக்கப்படும் குழந்தைகளைப் பாதுகாக்க பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

1. தற்போதுள்ள நடைமுறையைப் பலப்படுத்தல்.
2. இந்தக் கொள்கை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்க ஒரு முறையான வழிமுறையை உருவாக்குதல்.

3. சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளுக்கும் இடையில் ஒருங்கிணைப்பை உருவாக்குதல்.

4. இந்தக் கொள்கையோடு தொடர்புடைய அனைத்துப் பங்கேற்பாளர்கள் மற்றும் குழந்தைகளிடையே இந்தக் கொள்கை குறித்தும் தமிழ்நாடு அரசு குழந்தைகளின் நலனைப் பாதுகாக்க கடமைப்பட்டுள்ளது என்பது குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்..

5. மாநிலத்தில் குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான அளவில் பட்ஜெட்டில் நிதி ஒதுக்குவது. அதன் மூலம் அனைத்துக் குழந்தைகள், குறிப்பாக எளிதில் பாதிக்கப்படும் சமூகத்தில் இருந்து வரும் குழந்தைகள் மற்றும் சிறுமிகளுக்கு தமிழ்நாடு அரசு கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியும்.

6. மாநிலத்தின் அனைத்துக் குழந்தைகளுக்கும் அரசின் கொள்கையை நடைமுறைப்படுத்த தொழில்நுட்ப முன்னேற்றத்தை உகந்த அளவில் பயன்படுத்துதல்.

குழந்தைப் பங்கேற்பை ஊக்குவிக்கும் அதேவேளையில் பொது முடிவுகள் மற்றும் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைய பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் அமைப்புகள், சமூக அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் ஆலோசனைகள் மற்றும் கலந்தாய்வுகள் அடிப்படையில் செயல்திட்டம் (PoA) உருவாக்கப்படும். இந்தச் செயல்திட்டமானது, பல்துறை ஒருங்கிணைப்பு மற்றும் சிறப்பான பலன்களைத் தரும் விதத்தில் அமையும்.

கொள்கையை செயல்படுத்துவதற்கும் மேலும் கண்காணிப்பதற்கும் மாநில அளவில் பிரத்தியேகமான பல்துறை ஆலோசனைக் குழு அமைக்கப்படும்.

மேலும், குழந்தைகளின் வளர்ந்து வரும் தேவைகள், விளைவுகள் குறித்த மதிப்பீடு, இந்தக் கொள்கையின் வரம்பிற்குள் வரும் பல்வேறு அம்சங்களின் அளவீடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் போதுமான நிதி ஆதாரத்தை ஒதுக்குவதற்கு தமிழ்நாடு அரசு ஒரு குழந்தை வரவு-செலவுத் திட்டத்தை ஆய்வு செய்யும்.

ஆதாரங்களின் அடிப்படையிலான மதிப்பீடு, நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளின் அளவீடுகள் ஆகியவற்றின் மூலம் இந்தக் காலகட்டத்தில் கிடைத்த விளைவுகள் / தாக்கத்தை மதிப்பாய்வு செய்வதன் மூலம் ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் கொள்கை திருத்தப்படும்.

திட்டமிட்டு ஒத்துழைப்பை அதிகரிப்பதால் அனைத்து மட்டங்களிலும் முறையான ஒருங்கிணைப்பை பலப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கொள்கைச் சுருக்கத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள இலக்குகள், மாற்றத்துக்குட்பட்ட வழிமுறைகள் / உத்திகள் மற்றும் செயல்படுத்துவோர், குழந்தைகளுக்கான நிலைத்து நிற்கும் முடிவுகளை வழங்க உதவுவார்கள். இவையன்றி எந்தக் குழந்தையும் தனியாக விடப்படவில்லை என்கிற அரசியலமைப்புச் சட்ட செயல்திட்டத்தின் இலக்கை தமிழ்நாடு அரசு விரைவில் நனவாக்கும்.

❖❖❖

# LIST OF ABBREVIATIONS

| | |
|---|---|
| BMI | Body Mass Index |
| CSOs | Civil Society Organizations |
| CSR | Child Sex Ratio |
| ECCD | Early Childhood Care and Development |
| FLN | Foundational Literacy and Numeracy |
| GER | Gross Enrolment Ratio |
| GOI | Government of India |
| GoTN | Government of Tamil Nadu |
| HDI | Human Development Index |
| ICC | Internal Complaints Committee |
| ICT | Information and Communication Technology |
| IEC | Information Education and Communication |
| IMR | Infant Mortality Rate |
| INGOs | International Non-Government Organizations |
| MMR | Maternal Mortality Rate |
| NCF | National Curriculum Framework |
| NCPC | Neighbourhood Child Protection Committee |
| NCRB | National Crime Records Bureau |
| NFHS | National Family Health Survey |
| NGOs | Non-Governmental Organizations |
| OPHI | Oxford Poverty and Human Development Initiative |
| PoA | Plan of Action |
| POSH | The Sexual Harassment of Women at Workplace (Prevention, Prohibition and Redressal) Act, 2013 |
| RMNCH | Reproductive and Maternal New-born Child Health |
| RSOC | Rapid Survey On Children |
| SDGs | Sustainable Development Goals |
| SRS | Sample Registration System Statistical Report |
| TN | Tamil Nadu |
| TNSCP | Tamil Nadu State Child Policy |
| UDISE | Unified District Information System for Education |
| UNCRC | United Nations Convention on the Rights of the Child |
| UNDP | United Nations Development Programme |
| VLCPC | Village Level Child Protection Committee |

# குறிப்புகள்

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை

தமிழ்நாடு அரசு